<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>

# <u>MCOP. No. 129/2023</u>

2024-ம் வருடம் ஏப்ரல் திங்கள் 12-ம் நாளன்று மனுதாரர் / எதிர்மனுதாரர் சாட்சியாக ம.சா.3-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.S.பானுப்பிரியா, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : டாக்டர் திரு.லெட்சுமணன் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கொடுமுடி, சரவணா மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில், சாட்சியம் அளிப்பதற்காக அழைப்பாணையில் கேட்டுள்ள ஆவணங்களுடன் முன்னிலையாகியுள்ளேன். கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், சேமங்கி, வேட்டமங்கலம் மேற்கு, நெ.39 என்ற முகவரியில் வசித்து வந்த பெருமாள் மகன் ராமசாமி என்பவர் கடந்த 26.11.2022 அன்று காலை 11.00 மணிக்கு கொடுமுடி சரவணா மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். 04.12.2022 அன்று மாலை 4.45 மணியளவில் மருத்துவமனையிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். அவருக்கு மூளையில் இரத்தக்குழாய் அடைப்பு ஏற்பட்டதால், இடது கை, கால் செயல் இழப்பு ஏற்பட்டும், நுரையீரல், கிட்னி ஆகியவற்றில் கிருமித்தொற்று ஏற்பட்டும், இரத்தசோகை இருந்ததாலும் அவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மூளையில் கடுமையான இரத்தக்கட்டு ஏற்பட்டுள்ளது. எங்கள் மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்கு வருவதற்கு முன்பு அவர் வேறு எங்கும் சிகிச்சை எடுத்ததற்கான ஆவணங்களை கொடுக்கவில்லை. எனவே அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன .......

ராமசாமி என்பவருக்கு ஏற்கனவே வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு, அதற்கு அவர் மாவு கட்டு போட்டிருந்த நிலையில் சிகிச்சைக்கு வந்தார். அவருடைய இடதுபக்க கை, கால் செயலிழப்பு, மூளையில் ஏற்பட்ட இரத்தக்கட்டு காரணமாக ஏற்பட்டதாகும். தலையில் ஏற்பட்டிருந்த இரத்தக்கட்டு, விபத்தின் காரணமாக ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் விபத்து காரணமாக இரத்தக்கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது, இரத்தக்கட்டு ஏற்பட வாய்ப்பில்லை. அவருக்கு ஏற்பட்ட இடதுபக்க கை, கால் செயலிழப்பு காரணமாக, நான்கைந்து மாதங்கள் தொடர்ச்சியாக இருக்கும்போது, படுக்கைப்புண் ஏற்பட்டு, சீல் கட்டி இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.6 எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கை ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.